<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

<u>O.S.No.2/2015</u>

PW1 மணிமேகலை நாள் 19.12.2022

**<u>2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய பிறந்த தேதி 09.02.1956. என்னுடைய அப்பாவின் அப்பா பெயர் பழமலை. பழமலை எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. அவர் இறக்கும் வரையில் என் அப்பா எங்கள் குடும்பத்துடன் தான் இருந்தார். என் தாத்தா பழமலை பெயரில் சொத்துக்கள் நிறைய இருந்தன என்றால் சரிதான். என் தாத்தா பழமலை 30.03.1957 அன்று பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் புல எண். 422/6 இல் 49 செண்ட், 422/7 இல் 2.56 செண்ட் கிணறுடன் கிரையம் வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பா 1948 இல் கிரையம் வாங்கினாரா என்று எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்துக்கள் யாருக்கு எந்த வகையில் கிடைத்தது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களில் பாதி சொத்துக்கள் புல எண். 422 என்றும் 288 என்றும் குறிப்பிட்டுள்ளேன், அவை இரண்டும் ஒரே சொத்துக்கள் தானா என்று எனக்கு தெரியவில்லை. என் அப்பா வடிவேலுக்கு அரசாங்கம் மூலமாக நிலங்கள் எதுவும் கிடைத்ததா என்று எனக்கு தெரியவில்லை. தாவா சொத்துக்களில் உள்ள கடைகள் என் அப்பாவின் வருமானத்தில் தான் கட்டப்பட்டது. என் அப்பாவின் வருமானத்தில் கட்டப்படவில்லை என்றால் சரியல்ல. எந்த வருடம் கட்டினார் என்று எனக்கு தெரியாது. எந்த வருமானத்தில் கட்டினார் என்றும் எனக்கு தெரியாது. எனக்கு 09.02.1986 இல் திருமணம் நடந்தது. எங்கள் வீட்டில் நானும், 1, 2 பிரதிவாதிகளும் பெண் பிள்ளைகள். ஆண் பிள்ளைகள் நான்கு பேர். என் அப்பா எல்லா பிள்ளைகளுக்கும் தனித்தனியாக சொத்துக்கள் எழுதிக்கொடுத்ததாக சொல்வது சரியல்ல. என் அப்பா எனக்கு வீடு கட்டுவதற்காக 4 செண்ட் இடம் கொடுத்து அதை நான் என் கணவர் பெயருக்கு மாற்றினேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில்

288/7 சொத்து என் அப்பாவிற்கு அடமானமாக கிடைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சகோதரர் பாலமுருகன் இதே நீதிமன்றத்தில் O.S 11/2005 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கில் என்னையும் தரப்பினராக சேர்த்துள்ளார் என்றும், நான் தாவாப்படி தீர்ப்பாக ஆட்சேபனை இல்லை என்று மெமோ தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்வது சரியல்ல. நான் கையெழுத்து போட்ட தாள் நீதிமன்றத்தில் தாக்கலானது என்றால் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. வழக்கு போடுவதற்கு நான் தான் விவரம் சொன்னேன். O.S 11/2005 வழக்கில் நான் தீர்ப்பிற்கு சம்மதித்து மெமோ தாக்கல் செய்தது பற்றி இந்த வழக்கு தாக்கல் செய்யும்பொழுது என் வக்கீலிடம் சொன்னேனா என்று ஞாபகமில்லை. 2 ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் வீடு, ே ஹாட்டல், விடுதி ஆகியவை கட்டி அனுபவித்து வருகிறாரா என்று கேட்டால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் உள்ள வீடு, கடைகளுக்கு வரிவிதிப்பு யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அதற்கு யார் பணம் செலுத்தி வருகிறார்கள் என்றும் எனக்கு தெரியாது. என் அம்மா 12.05.2001 இல் இறந்தாரா என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை. என் அப்பா எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. என் அப்பா இறந்தபோது என்அம்மா உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் பட்டா யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீடு என் அப்பா எனது கணவருக்கு விலைக்கு கொடுத்தது. 1 ஆம் பிரதிவாதிக்கு என் அப்பா தனியாக நிலம் கொடுத்தார். தாவா 1 வது அயிட்டத்தில் 2 ஆம் பிரதிவாதி ஜீனா பிரவேசித்து 1990 இல் கடை கட்டி அனுபவித்து வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அதை நானோ, என் அப்பா அம்மாவோ ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் ஆட்சேபனை செய்தார்கள். ஆட்சேபனை செய்திருந்தால் அதற்கான ஆதாரம் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருந்தபொழுது 02.07.1992 இல் என் சகோதரி ஜீனாவிற்கு தாவா 1 வது

அயிட்டத்தை ஒட்டி தென்புறமாக உள்ள 2வது அயிட்டத்தில் நிலத்தை தானப்பத்திரமாக எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த தான பத்திரத்தின் அடிப்படையில் 2ஆம் பிரதிவாதி சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றும், அந்த தான பத்திரம் அமலுக்கு வந்துவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா, என் தாத்தா ஆகியோர் ஒன்றாக ஆதியில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தார்கள் என்றால் சரிதான். என் அம்மா இறப்பதற்கு முன்பாக மனநிலை சரியில்லாமலும், உடல்நிலை சரியில்லாமலும் இருந்தார். என் அம்மா மருத்துவரிடம் சிகிச்சை பெற்றாரா என்று எனக்கு தெரியாது. 01.06.2010 அன்று என் தாயார் நல்ல மனநிலையில் 2ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் பெரும் பகுதியை தானமாக எழுதிக்கொடுத்தார் என்றால் அது பொய். என் அம்மா பதிவாளர் அலுவலகத்திற்கு போகவில்லை. என் அம்மா கையெழுத்து போடும் நிலையில் இல்லை பதிவாளர் அலுவலகத்திலிருந்து வந்து கைரேகை வாங்கிப்போனார்கள். என் அம்மா இறந்தபிறகு தான் 2ஆம் பிரதிவாதிக்கு பத்திரம் எழுதிய விவரம் எனக்கு தெரியும். என் அம்மா இறந்தது எப்போது என்று எனக்கு தெரியாது. 2ஆம் பிரதிவாதிக்கு பத்திரம் ஏற்பட்டது எந்த வருடம், மாதம், தேதி என்று எனக்கு தெரியாது. நானோ, என் சகோதரர்களோ 2ஆம் பிரதிவாதி பெயரில் பத்திரம் எழுதியதற்கு சட்டப்படி நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 2ஆம் பிரதிவாதி தாவா 1வது அயிட்டத்தில் கடைகள் கட்டினார் என்றால் சரியல்ல. என் அப்பாதான் கட்டினார். என் அப்பா கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதை பல பேருக்கு 2ஆம் பிரதிவாதி வாடகைக்கு விட்டிருக்கிறார் என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்டத்தில் 40 x 40 அடியுள்ள சொத்தில் என் அப்பா கொடுத்ததை வைத்து கடை கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார் என்றால் அது செல்லாது. தாவா சொத்தில் உள்ள கடைகளின் வாடகை, அட்வான்ஸ் ஆகியவற்றை யார் வாங்குகிறார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் ரீசீவர் நியமனம் செய்ய சொல்லி மனு போட்டேன், அந்த மனுவில் 2ஆம் பிரதிவாதி

வாங்கும் வாடகைத் தொகையை நீதிமன்றம் மூலம் பரிபாலம் செய்யவேண்டும் என்று கேட்டிருந்தேன் என்றால் ஞாபகமில்லை. என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் மனைகள் சிலவற்றை விற்றார். என் அப்பா விற்ற மனைகளில் தங்கராஜ் என்பவரிடமிருந்து என் அம்மா மனை வாங்கினார் என்று எனக்கு தெரியாது. 03.02.1983 அன்று பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் என் அப்பா கிரையம் செய்த மனோகர் என்பவரிடமிருந்து என் அம்மா கிரையம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. மனோகரனிடமிருந்து கிரையம் வாங்கிய இடத்தில் ஒரு பகுதியை 2 ஆம் பிரதிவாதி 03.11.2003 அன்று பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறாரா என்று எனக்கு தெரியாது. அந்த இடத்தில் 2 ஆம் பிரதிவாதி ஒரு வீடு, கடை ஆகியற்றை ஐசிஐசிஐ வங்கி மூலம் கடன் பெற்று கட்டினார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வீட்டில் தான் குடியிருந்துகொண்டு சொத்துக்களை 2 ஆம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா உயிருடன் இருந்தபோது என்அம்மாவிற்கு 15.06.1981 அன்று பதிவு செய்யப்பட்ட தான பத்திரத்தின் மூலம் தாவா 5 வது அயிட்ட சொத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது, 1981 இல் நான் எங்கிருந்தேன் என்று ஞாபகமில்லை.

சாட்சி அதிக நேரம் உட்கார இயலவில்லை என்று கூறியதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.